அறிக்கையாகவோ அல்லது இதே சபையிலே எப்பொழுதுமே announce செய்வதுதான் ஒரு மரபாக இருந்து வந்திருக்கிறது. இப்படி மரபுகளை மீறி வரக்கூடிய செய்திகளைக் குறித்து தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து அரசிடமிருந்து அதனுடைய விளக்கம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன என்று விசாரிக்கிறேன்.

2. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்.

***திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை, 2001-2002 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 63 முதல் 67 வரையிலான 5 அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மனுக்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. பி.எம். நரசிம்மன்.

திரு. பி.எம். நரசிம்மன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் வணங்குகிற தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2001-2002 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் 1 முதல் 3 வரையிலான அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.